# எஸ்தர் காவியம் வெளிப்படுத்தும் இனவுணர்வு

*பொன். கனகா*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
வ.உ.சிதம்பரம் கல்லூரி, தூத்துக்குடி

மலர்: 11

சிறப்பிதழ்: 2

மாதம்: ஜூலை

வருடம்: 2023

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS2i1-July.6389

## முன்னுரை

*சமுதாயத்தில் படைக்கப்படும் இலக்கியங்கள் அனைத்தும் தாம் வாழ்ந்த சமூகத்தின் வாழ்வியலைப் பிரதிபலிக்கின்ற பிம்பங்களாக அமைகின்றன. இலக்கியங்கள் மக்களின் வாழ்வியலை எடுத்துரைக்கும் கருவி எனலாம். இக்கருவி ஒவ்வொரு காலக்கட்டத்திலும் பல பரிணாமங்களைப் பெற்று விளங்குகிறது. அவ்வகையில் கிறித்துவக் காப்பியங்கள் பல இருப்பினும், விவிலயத்தின் பழைய ஏற்பாட்டை மையமாக வைத்து எழுதப்பட்ட எஸ்தர் காவியம் தனிச்சிறப்புடையதாக விளங்குகின்றது. அக்காவியத்தின் தலைமை மாந்தாரான எஸ்தர் வழியாக காப்பியம் வெளி ப்படுத்துகின்ற இனவுணர்வினை ஆராய்வதாக இவ்வாய்வு அமைகிறது.*

## எஸ்தர் காவியம்

*எஸ்தர் காவியம் என்னும் நூல், உதகமண்டலைச் சார்ந்த இராபின்சன் குரூசோ அவர்களால், **1986**ஆம் ஆண்டு படைக்கப் பட்டது. இந்நூல், விவிலியத்தின் பழைய ஏற்பாட்டிலுள்ள எஸ்தர் என்னும் பெண்மணியை காப்பியத் தலைவியாகக் கொண்டு படைக்கப் பட்டுள்ளது.*

## காப்பிய அமைப்பு

I. *வஸ்திக்கு மாற்றாக எஸ்தர் கொண்டுவரப்படுதல்*
   *அ.வஸ்தியின் கீழ்ப்படியாமை*
   *ஆ.எஸ்தர் முடிசூட்டப்படுதல்*
II. *மொர்தகாய் ஆமானை மேற்கொள்ளுதல்*
   *அ.மொர்தகாவின் விசுவாசம்*
   *ஆ.ஆமான் பதவி உணர்த்தப்படுதல் மற்றும் ஆணை*
   *இ.எஸ்தர் இடைபடுதல்*
   *ஈ.மொர்தகாய் அங்கீகரிக்கப்படுதல்*
   *உ.ஆமானின் வீழ்ச்சி*
III. *ஆமானின் சதித்திட்டத்தில் இருந்து இஸ்ரவேல் பாதுகாக்கப்படல்*
   *அ.எஸ்தர் மற்றும் மொர்தகாய் பரிந்து பேசுதல்*
   *ஆ.யுதர்களின் வெற்றி - புரிம் பண்டிகையின் ஆரம்பம்*
   *இ.மொர்தகாய் பிரசித்தம் அடைதல்*

### காப்பியச் சுருக்கம்

பாபிலோனியச் சக்கரவர்த்தி நேபுகாத்நேசன் என்ற மன்னன் யுத நாடுகளின் மீது படையெடுத்து, யுதேயாவின் அரசன் எகொனியாவைச் சிறைபிடித்துச் செல்கிறான். அப்போது எருசலேமிலிருந்து மொர்தகாய் என்பவனையும் சிறைபிடித்துச் செல்கிறான். மொர்தகாயின் சிறிய தந்தையின் மகள் எஸ்தர். தன் பெற்றோர் இறந்துவிட, அண்ணன் மொர்தகாயின் அரவயைப்பில் வளர்கிறாள். சூசான் நகரைத் தலைமையாகக் கொண்டு அகாஸ்வேரு மன்னன் ஆண்டு வந்தான். மன்னனின் மனைவி வஸ்தி தேரில் அமர்ந்து உலா வர மறுத்ததால் அவளை நீக்கிவிட்டான். மன்னன் செங்கொலை நீட்டித் தன் கிர°டத்தை எஸ்தர் சிரசின் மீது வைத்து ராணியாக்கிக் கொண்டான். அரசனின் அமைச்சர் ஆமான் யூதரினத்தை அழிக்க முற்பட்டான். மொர்தகாய் அதனை அறிந்து இளவரசி எஸ்தரிடம் தெரியப்படுத்துகிறான். இனவுணர்வு கொண்ட எஸ்தர் தன் உயிரை துச்சமென மதித்து யுதரினத்தைக் காக்க உறுதியேற்கிறாள். அரசனையும் ஆமானையும் விருந்திற்கு அழைக்கிறாள். விருந்துண்ணும்போது மது மயக்கத்தில் இருந்த ஆமான், எஸ்தரின் படுக்கையில் இடரி விழுகிறான். ஆமான், அரசி எஸ்தரைக் கெடுக்கத் துணிந்தான் என்றெண்ணி, அவனை தூக்கிலிட அரசன் உத்தரவு பிறப்பிக்கின்றான். யுத இனத்தை அழிக்கும் சட்டத்தை மாற்றி, புர் சீட்டைக் கிழித்தெறிந்து வெற்றியடைந்த இனவுணர்வு நாளை “புரிம்” விழாவாக எடுத்து கொண்டாடினர். இனவுணர்வு கொண்டு யுதரினத்தை எஸ்தர் எவ்வாறெல்லாம் போராடி மீட்டாள் என்று மக்கள் அனைவராலும் பேசப்படுவதாக இக்காப்பியம் அமைந்துள்ளது.

### இறக்கவும் துணிதல்

அகாஸ்வேரு மன்னருடன் வாழ்ந்து வந்த எஸ்தர், தன்னுடைய யுதர் இனத்தை ஆமான் என்னும் அமைச்சர் அழிக்க நினைத்ததை அறிந்து கொள்கிறாள். தன் இனத்தை அழிக்க எண்ணிய ஆமானைப் பழிவாங்க எண்ணியவளாய், மன்னனின் அரசவையில் நுழைந்து முறையிட விரைகிறாள்.

**“இனத்தின் உணர்வின் மிகுதியால்**
**இறக்கவுந் துணிந்துவிட்டேன்**
**மனதிற்கு கவலை கொள்ளாது**
**மன்னவன் மண்டபஞ் செல்லுவேன்**
**சினத்திற் செங்கோல் நீட்டாது**
**சீறியே மன்ன விருந்தால்**
**இனத்தின் மானங் காத்தங்கு**
**இன்பமாய் இறந்து மடிவேன்”**

***(எ.கா.316)***

முறையிட்டமைக்காக மன்னன் கோபப் பட்டால் கூட, இனத்தின் மானத்தைக் காத்து நின்று மகிழ்ச்சியாய் இறந்துமடிவேன் என்று கூறி, யுதர் இனத்தைக் காக்க முற்படுவதாக காப்பியம் குறிப்பிடுகிறது.

சிலப்பதிகாரத்தில் கண்ணகி, கோவலன் இறந்தவுடன் மதுரை பாண்டிய மன்னரிடம் சென்று எவ்வாறு முறையிட்டாலோ, அதுபோல யுதர் இனத்தை அழித்துக்கொண்டிருக்கும் ஆமானை அழிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் எஸ்தர் மன்னனின் அரசவைக்குச் சென்று முறையிடுவதாகக் அமைந்துள்ளது.

தன் இனமக்களைக் காப்பதற்குத் தனி ஒரு பெண்ணாக இருந்து, தன் உயிரை விடவும், யுதர்களின் உயிரினை உயர்வாய்க் கருதி, மாபெரும் சதிகளை எதிர்த்துப் போராடும் போராளியாக எஸ்தரின் இனவுணர்வு வெளிப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

### தனம் பணம் வேண்டாமை

மொர்தெகாய், யுதர்களை அழிவிலிருந்து மீட்க எஸ்தருக்கு இனவுணர்வை ஊட்டுகிறான். அரசவை சென்ற எஸ்தர் கண்ணீரோடு அழுது முறையிடுகிறாள்.

***"இனத்தை மீட்கும் எண்ணத்தால்***
***இதயங் குமுறி நின்றேன்***
***மனத்தின் கவலை நீங்க***
***மன்ன என்னைத் தாங்கினேன்***
***கனத்தில் உயர்ந்துநான் ஓங்கக்***
***காவல் கனிவு காட்டினை***
***தனத்தைப் பணத்தை வேண்டிலேன்***
***சனத்தைக் காக்க வேண்டினேன்"***

***(எ.கா.718)***

*எஸ்தர் மன்னனிடம், தனக்குச் சேமித்து வைத்துக் கொள்ள பணம் பொருள் வேண்டாமல், யுதர்களைக் காப்பாற்றுவதற்காக மன்றாடுகிறாள்.*

*அரசன் தன்பெயரில் மடல் வரைந்து வெளியிட்டுக்கொள்ள எஸ்தருக்கு உரிமையளிக்கின்றான். அமைச்சர்கள், மூப்பர்களிடம் தெரிவித்து ஆலோசனை பெற்று, அரசன் முத்திரை பதித்த செய்தியை நாடெங்கும் அறிவிப்பு செய்கிறாள். இவ்வாறு தனது இனத்தைக் காக்க எஸ்தர் பல வழிகளில் முயற்சி செய்துள்ளதை காப்பியம்வழி உணர முடிகிறது.*

## ***இனத்தைக் காத்தல்***

*மன்னரிடம் இதுவரை ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட யுதர்கள் இறந்துள்ளார்கள் என்பதை எஸ்தர் தெரியப்படுத்துகிறாள். அவர்களைக் காக்க வேண்டும் என்று கூறுகிறாள். அனைத்தையும் கேட்ட பின்பு, அரசன் யுதரினத்தைக் காக்க சட்டமொன்றை எழுதி, தனது முத்திரையைப் பெற்றுச் செல்வாயாக என எஸ்தரிடம் கூறுகின்றான்.*

***"ஆன்றவர் பெருமையை யுதர்கள்***
***அடைந்தனர் உன்னால் எஸ்தரே***
***தோன்றிய துங்கொன்று தூக்குவாய்***
***தொடர்ந்துன் னினங்கள்காத்து ஆக்குவாய்"***

***(எ.கா.730)***

*என்று மன்னன் அகாஸ்வேரு எஸ்தரின் இனவுணர்வைப் பாராட்டுகின்றான்.*

*மன்னனின் ஆணை கிடைக்கப்பட்டதும் சூசான் நகரம் முழுவதும் செய்தி' பரவியது. காலைக் கதிரவன் உதிக்கும் நேரத்தில், வெற்றி முரசு கொட்டும் போதிலிருந்தே யுதரினத்தார் பகைவர்களைத் தேடத் தொடங்கினர்.*

***"வதைகள் தொடங்க யுத ரினத்தார்***
***வலிதிற் பகைவரைத் தேடினார்***
***கதையை முடிக்க நாட்டி யெங்கும்***
***கயவர் பலரைச் சாடினார்" (எ.கா.735)***

*யுதர்கள் பகைவர்களைக் கொன்று குவிக்கும் எண்ணத்தை மனதில் கொண்டார்கள். அதன்படியே கொன்றும் குவித்தார்கள். இவ்வாறு இரண்டு நாட்களில் பகைவர் அனைவரையும் கொன்று, யுதர்கள் தங்களைக் காத்துக்கொண்டதாக குறிப்பிடுகின்றது.*

*இதன்மூலம், எஸ்தர் தன் மக்கள்மீது கொண்டிருந்த அளவிடற்கரிய அக்கறையும், அவ்வுணர்வால் அவள் பெற்ற துணிவும்தான், யுதர் இனத்தின் வெற்றிக்கு முழுமுதற் காரணமாக அமைந்தது என்பதை அறிய முடிகிறது.*

## ***பூரிம் வெற்றிவிழா***

*பருவக்குழந்தை முதல் பட்டத்து குமரி வரை அனைத்து யுதர்களையும் காத்து வந்த எஸ்தர், பதின்மூன்று நாட்களில் பகை ஒழித்து, பதினான்காம் நாளில் ஓய்வெடுத்து, பதினைந்தாம் நாளில் மாநிலம் முழுவதும் விழாவொன்றை எடுக்கச் செய்தாள்.*

***"சூதரென் பாரை அடியொடு தொலைத்துச்***
***சூழ்ந்துவந் துற்ற அழிவை நிறுத்திப்***
***பாதகர் எண்ணிய சதிகளை முறித்துப்***
***பாரினில் எங்கேணும் யுதர்கள் மீண்டனர்***
***மாதர்கள் குலத்தின் மாணிக்கம் எஸ்தர்***
***வழங்கிய வாழ்வே யுதரில் வாழ்வு"***

***(எ.கா.743)***

*நாட்டில் அனைவரும் பாட்டுப்பாடியும், பரிசுகள் கொடுத்தும், வெடிவெடித்தும், விருந்துண்டும் விழாவினைக் கொண்டாடினார்கள். வண்ணத் தோரணங்கள் கட்டியும், புத்தாடை உடுத்தியும், ஆடல்பாடல் நிகழ்வுகள் நடத்தியும் மகிழ்ச்சியில் திளைத்ததாக காப்பியம் குறிப்பிடுகின்றது.*

**"எங்கள் பகைவர் எங்போ மறைந்தனர்**
**இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டு"**
என்ற பாரதிதாசன் வரிகளுக்கேற்ப, யுதர்கள் எஸ்தரோடு இணைந்து ஒன்றாகப் போராடி வெற்றி கண்டதை காப்பியம் புலப்படுத்துகிறது.

யுதர்களை காத்து மீட்டதோடு, அவர்கள் கொண்டாடி மகிழ புரிம் விழாவையும் எடுத்ததன் மூலம் எஸ்தர் தன் இனமக்கள் மீது கொண்டிருந்த அன்பினை உணர முடிகிறது.

## இனங்களில் வேற்றுமை இல்லை

இனவுணர்வு ஒவ்வொரு மாந்தரின் இரத்தத்திலும் கலந்த இயல்பான ஒரு உணர்வு. அவ்வுணர்வு அளவோடு இருக்கும் வரை யாருக்கும் எத்தீங்கும் ஏற்படாது. உயர்ந்தது தாழ்ந்தது என்று வரும்போது தான் தாக்குதல்கள், அழிவுகள் ஏற்படுகின்றன. அவை இனங்களுக்கு இழிவுதரும் செயல்களாகும்.

**"வனவிலங்கு அல்லவே மக்களின் இனங்கள்**
**வதைத்திடல் கொன்றிடல் மறைநெறி யாகுமா**
**இனமான மக்களில் யாரையுமு' மதிப்போம்**
**இனங்களில் வேற்றுமை யின்றென விதிப்போம்" (எ.கா.827)**

என்ற வரிகள், பகுத்தறிவு கொண்ட மனிதர்கள், ஆறறிவு இல்லாத விலங்குகள் ஒன்றையொன்று தாக்கி அழிவதுபோல, அடித்துக் கொண்டு சண்டையிட்டுச் சாவது நெறியா என்ற கேள்வியை முன்வைக்கின்றது. இனங்களிலே வேற்றுமை இல்லை என விதியினை வகுப்போம் என்ற உறுதியினை அனைவரும் எடுத்துக் கொண்டதாக குறிப்பிடுகின்றது.

**"வண்ணங்கள் வேற்றுமைப்பட்டால்- அதில்**
**மானுடர் வேற்றுமையில்லை**
**எண்ணங்கள் செய்கைகள் எல்லாம் - இங்கு**
**யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்"**

என்றுதனது பாடலில் குறிப்பிடுகிறார் பாரதிதாசன்.

## முடிவுரை

சமுதாயத்தில் சாதாரணப் பெண்ணாகப் பிறந்து வளர்ந்த எஸ்தர், தன்னுடைய வாழ்க்கையை இனத்திற்காக அர்ப்பணித்துள்ளார். தன் இனம் அழிந்துவிடக்கூடாது என்பதற்காகப் பொதுநலனுடன் போராடி, பிறருக்கு முன்மாதிரியாக வாழ்ந்துகாட்டியுள்ளார். காவியம் வெளிப்படுத்தியுள்ள இனவுணர்வு, இனவெறி முற்றி முட்டிமோதிக் கொள்ளும் இன்றைய யுகமனிதர்களுக்கு பாடமாகத் திகழ்கிறது.

## துணைநூற்பட்டியல்

1. எஸ்தர் காவியம், செ.ராபின்சன் குருசோ, முதல் பதிப்பு 1986, சோபியாராணி பதிப்பகம், உதகை.
2. பாரதிதாசன் கவிதைகள், பாரதிதாசன், எட்டாம் பதிப்பு 2010, கங்கை புத்தக நிலையம், தி.நகர், சென்னை -17.